3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். திரு. சிவபுண்ணியம்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றதெல்லாம் ஆய்வில் இருக்கிறது.

திரு. மு.பெ. சாமிநாதன்: அமராவதி ஆற்றில் மணல் எடுப்பது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாம் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) வேலு, ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள்.

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம். திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதத்திலே நேற்றையதினம் சில செய்திகள் குறிப்பிடப்பட்டு அவை முற்றுப் பெறாமலேயே இருக்கின்றன; திரும்பவும் ஒரு விவாதமாக மாற்ற வேண்டிய அவசியமில்லை; காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து நான் மிகவும் பணிவோடு திரும்பத் திரும்ப வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், நாம் காவிரி நீர் பிரச்சினைப் பற்றிப் பேசுகிறபோது அது லாவணிக்கச்சேரியாக மாறிவிடுகிறது. அதுதான் வருத்தமாக இருக்கிறது. கர்நாடக மாநிலத்திலே இருக்கின்ற அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து அவர்கள் அதை ஒரே குரலாக அங்கே குரல் கொடுக்கிறார்கள். ஆனால், இங்கே, நாம் லாவணிக்கச்சேரி நடத்துவதைப் போன்ற உணர்வுகள் வருகிறபோது கர்நாடகத்திலே பிடிவாத குணம்